என்ற யோசனை உயர்நீதி மன்றத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் போதுமான அளவுக்குவேலை இருக்காது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

*16 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் சப்-கோர்ட் திறக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 'இம்மாநிலத்தில் உள்ள நாட்டியல் (சிவில்) குற்றவியல் (கிரிமினல்) நீதி மன்றங்களின் அதிகார வரம்பினை ஆராயும் குழு' இப்பொருள்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கரூர் ஒரு பெரிய நகரம். மேலும் டிவிஷனல் ஹெட்குவார்ட்டர்ஸ் கரூரில் இருக்கிறது. அதைச் சுற்றிப் பல இடங்கள் இருப்பதால், இந்த சப்-கோர்ட் அமைக்கும் முயற்சியைத் துரிதப்படுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த ஆராயும் குழுவிடத்தில் இந்தப் பிரச்னையை வைக்கவேண்டுமென்று உயர்நீதிமன்றம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த சப் கோர்ட், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் அமைப்பது சம்பந்தமாக வரதராஜன் கமிட்டி அமைத்து ஒரு ஆண்டுக்கு மேலாகிவிட்டது. அவர்கள் எப்பொழுது சிபாரிசைக் கொடுப்பார்கள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் மாநிலத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று ஆங்காங்கு பொதுமக்களையும், வழக்குரைஞர்களையும் சந்தித்துக் கருத்துக்களைச் சேகரிக்கிறார்கள். அவைகளெல்லாம் முடிந்தபிறகு விரைவில் தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Release of prohibition offenders

*17 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that prohibition offenders have been released around 4th week of August 1971 due to scrapping of prohibition throughout the State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) மதுவருந்திய அல்லது மது வாங்கிய குற்றத்திற்காக அல்லது குடிபோதையில் இருந்த குற்றத்திற்காகத் தண்டனை அனுபவித்து வந்த கைதிகளுக்கு மட்டுமே தண்டனை குறைப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. மொத்தத்தில் 802 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether it would not be proper to release all the prisoners who had been convicted previous to the repealing of the prohibition Act in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மதுவிலக்கு ரத்தான வுடன் மது குடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மது காய்ச்ச சட்டவிரோதமாக அனுமதிக்கப்படவில்லை. குடித்தவர்கள், மது வாங்கியவர் கள், குடிபோதையில் இருந்தவர்கள் இவர்களைமட்டும் விடுதலை செய்யலாம். மற்ற குற்றங்களைச் செய்தவர்கள் விடுதலை செய்யப்படவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

வாலாஜாப்பேட்டையில் இரசாயனப் பொருள் உற்பத்தி ஆலை

*18 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜாப்பேட்டையில் சோடியம் டை கார்பனேட் என்ற இரசாயனப் பொருள் ஆலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மொத்த முதலீடு எவ்வளவு? அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சோடியம் டை குரோமைட் தயாரிப்பதற்கான ஆலை ஒன்று வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜாப்பேட்டை யில் நிறுவப்பட்டு வருகிறது.

(இ) இத்திட்டத்தினால் அரசுக்குண்டான மீளாச்செலவு (Non-Recurring expenditure) ரூ. 4,65,000 நடைமுறைச் செலவு ஆண்டுக்கு ரூ. 2,90,000. இந்த ஆலை 1971 முடிவுக்குள் செயல்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஆலையில் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதால் ஒரு ஆண்டுக் காலமாகத் துவக்கப்படவில்லையென்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்த, அந்த காண்டிராக்டர்கள் பணத்தை முன்னாலேயே பெற்று விட்டதால் ரிப்பேர் செய்து கொடுக்காத நிலை இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ? உடனடியாக அவைகளைப் பழுதுபார்த்து அவைகள் இயக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருபற்றி அங்கத்தினர் கூறிய கருத்து ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது. அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே அவர்கள் இயந்திரங்களெல்லாம் அமைத்து அதற்கு 100-க்கு 90 சதவிகிதம் முன் பண மாகத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இயக்குநரின் சிபாரிசு அரசாங்கத் திற்குக் கிடைத்திருக்கிறது. அதை 'டிரெயில்' செய்யும்பொழுது 'டீத்தின் டிரபிள்' எப்பொழுதும் தொழிற்சாலையில் வரும், அது வந்து இருக்கிறது. இன்னும் சில நாட்களுக்குள் சரிப்பட்டு உற்பத்தி தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.